அருளோசை

திருவள்ளுவர்
ஆண்டு 2005
புரட்டாசி
1974 செப்டெம்பர்



வடதிருமுல்லைவாயில் மாசிலாமணீசுவரர்
திருக்கோயில்

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9, மகாராஜா சூரியராவ் சாலை,
சென்னை-600 018

ண்டுச் சந்தா ரூ. 5]
[தொலைபேசி : 7



தெய்விகப் பாடல் இசைத்தட்டு

பாடியவர்

இசைப்பேரரசி சேலம் எஸ். ஜெயலக்ஷ்மி,

29, III ஆவது மெயின் ரோடு, கஸ்தூரிபாய் நகர்,

அடையாறு, சென்னை-600 020.

தொலைபேசி எண் : 77072.

—: o :—

1. தேவாரம், சிவபுராணம் 40 நிமிடம் ECLP 2445 (33 RPM)
2. உமையம்மை வழிபாடு 13 நிமிடம் 7 EPE 1753 (45 RPM)
3. தியாகராஜ கீர்த்தனை - தொரகுன, ஐமிதாமுராரே (13 நிமிடம்) 7 EPE 1668 (45 RPM)

H.M.V. இசைத்தட்டு வியாபாரிகளிடம் கிடைக்கும்.

அருளோசை

சமய பாட போதனைத் திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 3	ஆனந்த புரட்டாசி 1974 செப்டெம்பர்	ஓசை 3

அருளோசை அன்பர்களுக்கு, வணக்கம்.

இம்மாதத்தில் 'விநாயகர் சதுர்த்தி' வருகிறது. அன்பர்கள் அனைவரும் தத்தம் இல்லங்களிலும் திருக்கோயில்களிலும் விநாயகர் சதுர்த்தித் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடுவீர்கள் என்பதில் ஐயமில்லை.

விநாயகப் பெருமான் எல்லாவற்றிற்கும் முதலானவர். எந்தச் செயலைச் செய்யத் தொடங்கும் முன்பும் முதலில் விநாயகருக்கு நம் வழிபாட்டைச் செலுத்துகிறோம். எதை எழுதத் தொடங்கினாலும், "பிள்ளையார் சுழி"யிட்டே எழுதத் தொடங்குகிறோம். பெரும் காவியங் களையும் இலக்கியங்களையும் படைக்கத் தொடங்கும் ஆசிரியர் பெரு மக்கள், விநாயகப் பெருமான் மேல் காப்புச் செய்யுள் ஒன்று பாடித், தாம் எழுதத் தொடங்கும் நூல் எவ்வித விக்கினமும் இன்றி முடியத், திருவருள் சுரக்கும்படி விநாயகப் பெருமானை வேண்டுவர். இந்த இதழில் 'விநாயகர் தோத்திராட்டகம்' உரையுடன் வெளியிடப் பெறுகிறது.

சந்தா முடிவடைந்ததும் பல அன்பர்கள் என்ன காரணத் தினாலோ தங்கள் சந்தாவை மீண்டும் புதுப்பிப்பதில்லை. சந்தா முடிவடையும் அன்பர்கள் ஒவ்வொருவருக்கும், அவர்களின் சந்தா முடிவடையும் செய்தி தனித்தனியே அஞ்சலட்டை மூலம் அறிவிக்கப் பெறுகிறது. அருள்கூர்ந்து அவ்வஞ்சலட்டை கிடைக்கப்பெற்றதும் தங்கள் சந்தாவை அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் சந்தாவை அனுப்பும்போது, மணியார்டர் அடிக்கட்டையில் தங்கள் சந்தா எண்-தெளிவான முகவரி ஆகியவற்றைக் குறிக்கும் படியும் கேட்டுக்கொள்கிறேன்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

இந்த இதழில்

"அருளோசை"

வினா விடைப் பகுதி-ஆகஸ்டு-74

பரிசு பெற்றவர்கள்

முதல் பரிசு: திரு. பி. தங்கம், காஞ்சிபுரம்-3, செங்கற்பட்டு மாவட்டம், சந்தா எண். 3016.

இரண்டாம் பரிசு: 1. திரு. கி. சுப்பராமன், சென்னை-1, சந்தா எண். 846.

2. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி, கூத்தாநல்லூர், தஞ்சை மாவட்டம், சந்தா எண். 3145.

மூன்றும் பரிசு: திருமதி. மீனாட்சி தியாகராசன், விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டம், சந்தா எண். 2120.

நான்காம் பரிசு: செல்வன் கோ. இராமமூர்த்தி, பட்டீச்சுரம், தஞ்சைமாவட்டம், சந்தா எண். 3001.



உ

திருச்சிற்றம்பலம்

விநாயகர் தோத்திராட்டகம்

(பழ-தரும-ஆறுமுகம்)

கச்சியப்ப முனிவர் அருளிச் செய்த "விநாயகபுராண"த்தில் உள்ளது இவ் "விநாயகர் தோத்திராட்டகம்."

நூலாசிரியர்: இந்நூலாசிரியரான கச்சியப்ப முனிவர் இன்றைக்கு இருநூறு ஆண்டுக்கு முன் திருத்தணியில், தொண்டை மண்டல பரம்பரைச் சைவ வேளாண் குலத்தில் அபிஷிக்த மரபில் அவதரித்தவர். கச்சியப்ப முனிவர், அவ்விநாயக புராணமேயன்றிக் காஞ்சிப் புராணம், திருத்தணிகைப் புராணம், பூவாளூர்ப் புராணம், திருவானைக் காப் புராணம், பேரூர்ப் புராணம் என்னும் திருத்தலப் புராணங்களையும் அருளிச்செய்தவர்.

இத்தோத்திராட்டகம் உபாசன காண்டம், லீலா காண்டம் என்னும் இருபெரும் பகுதிகளையுடைய விநாயக புராணத்தில், உபாசன காண்டத்தில், 'காசிபர் முதலியோர் அநுட்டித்த படலத்தில்' காணப்படுவது.

புராண வரலாறு: முன் ஒரு பிரளய முடிவில், பிரும்மா தன்மனத்தால் ஏழு புதல்வர்களை உண்டாக்கினர். அவ்வெழுவருள் சிறந்து விளங்கிய காசிப முனிவருக்கு, ஏகாட்சர மந்திரத்தை உபதேசித்தார். அதனைச் செபிக்கும் முறை முதலியவற்றையும் தெளிவுபடுத்தினர். பின் "மகனே! நீ ஐம்புலன்களையும் ஒருமைப்படுத்தி, விநாயகருடைய திருவடிகளில் மனத்தைச் செலுத்தி, ஏகாட்சரத்தைச் செபித்துத் தவம் செய்து, திருவருள் பெற்றுச் சகல ஆன்மாக்களையும் படைப்பாயாக" என்று காசிபரிடம் கூறினர்.

காசிபர் அவ்வாறே ஆயிரம் தேவ வருடம் தவம் செய்தார். அது கண்டு திருவுளம் இரங்கிய விநாயகப் பெருமான், திருவருள் பாலிக்க எண்ணினர்.

திருமுடியில் மாணிக்கக் கிரீடமும் வளர்பிறையும், திருச்செவிகளில் குழைகளும் விளங்க, மும்மதம் பொழிகின்ற ஆனை முகமும், துதிக்கையும் திருமார்பில் முத்தாரமும், பாசம், அங்குசம், தாமரை மலர், ஒற்றைக் கொம்பு ஆகியவற்றைத் தாங்கிய நான்கு திருக்கரங்களோடு, மூடிக வாகனத்தின் மீதிவர்ந்து, கணக்கற்ற சூரியர்களை விஞ்சும் அருட்பிரகாசத்தோடு, காசிபரின் முன் தோன்றினர். உடனே காசிபர் விரைந்தெழுந்து, பன்முறை வலம் வந்து உள்ளன்பினோடு, இரு கரங்களையும் சிரமேற் கூப்பிக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க வணங்கி நின்றார்.

அதனைக் கண்ட விநாயகப் பெருமான், "காசிப, வேண்டிய வரங்களைக் கேள்! தருகிறோம்!" எனத் திருவாய் மலர்ந்தருளினார். காசிபர், "சுவாமி, அடியேன் அனைத்துயிரையும் படைக்க அருள் புரிய வேண்டும்" என்று விண்ணப்பித்தார். விநாயகப் பெருமானும் அவ்வாறே அருள் புரிந்தார்.

அதன்பின் காசிபர் தன் ஆசிரமத்தினை அடைந்தார். அங்கு, தம் பத்தினியர் பதினான்கு பேரொடுங் கூடி இன்புற்றிருந்தார். அவர்கள் கர்ப்பத்திலிருந்து எண்ணற்ற சராசரங்கள் உண்டாயின.

காசிபர், விநாயகப் பெருமான் திருமந்திரங்களில் ஒன்று, நான்கு, ஐந்து, எட்டு, பன்னிரண்டு, பதினாறு, பத்தொன்பது என்னும் எழுத்துக்களை யுடையவைகளைத் தேர்ந்தெடுத்தார். அவற்றைத் தன் பத்தினியர்களிடம் தோன்றியவர்களுக்கு உபதேசித்தார்.

பின்னர், அவர்கள் யாவரும் ஒவ்வொரு மந்திரங்களைக் கடைப் பிடித்து, ஆயிரம் தேவவருடம் விநாயகரைத் தியானித்திருந்தனர். விநாயகப் பெருமான், அவ்வவர்கள் தியானித்தபடி திருவுருக் கொண்டு அவர்கள் முன் தோன்றித் திருவருள் புரிந்தார். அனைவரும் மகிழ்ச்சி கொண்டார்கள். பின் ஏகாங்கமாகவும், திரியாங்கமாகவும், பஞ்சாங்கமாகவும், அட்டாங்கமாகவும் விழுந்து வணங்கித் தொழுது நின்று பின்வருமாறு துதி செய்தனர்.

[குறிப்பு: ஓம்–அதாவது பிரணவம் என்பது பிரும்மவாசகம். அஃது எல்லாம் வல்ல பரம்பொருளைக் குறிக்கும். அதன் வடிவம் விநாயகர். எனவே அப் பரம்பொருளுக்குள்ள எல்லாக் குணங்களும் விநாயகருக்கு உண்டு எனக் கொள்வது மரபு].



தோத்திராட்டகம்

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
    பரப்பும் எவன்பால் உதிக்குமோ,
எந்த உலகும் எவனிடத்தில்
    ஈண்டி யிருந்து கரக்குமோ,
சந்த மறை, ஆகமம், கலைகள்
    அனைத்தும் எவன்பால் தரவருமோ
அந்த இறையாம் கணபதியை
    அன்பு கூரத் தொழுகின்றும்

உரை: உயிர்களோடு பொருந்தியிருக்கும் பாசக்கட்டை நீக்குவதற்குரிய, எல்லையற்ற பரந்த பண்புகளை எவன் தோற்றுவானோ, எல்லாச் சராசரங்களும் எந்தப் பரம்பொருளை ஆதாரமாகக்கொண்டு அதனி

டத்தில் ஒடுங்கித் திரண்டு கூடியிருந்து மறையுமோ, யாப்பு வகைகளை யுடைய மறை, ஆகமம், ஏனைய கலைகள் அனைத்தும் எவனிடத்தி லிருந்து தோன்றுமோ, அந்தப் பரம்பொருளாகிய விநாயகப் பெருமானை உள்ளத்தில் பொருந்தியிருக்கின்ற அன்பானது மிகுந்து வரத் தொழுகின்றோம்.

உலகம் முழுதும் நீக்கமற
 ஒன்றாய் நிற்கும் பொருள்எவன், அவ்
உலகில் பிறக்கும் விகாரங்கள்
 உறுத மேலாம் ஒளியாவன்,
உலகம் புரியும் வினைப்பயனை
 ஊட்டும் களைகண் எவன், அந்த
உலக முதலைக் கணபதியை
 உவந்து சரணம் அடைகின்றாம்.

உரை: தான்வேறு, உலகம் வேறு என்று இல்லாது எல்லா உலகங்களிலும் பிரிப்பின்றிக் கலந்து அவையே தானேயாகி நிற்கின்ற பரம்பொருள் எவனோ, அப்படிக் கலந்திருந்தாலும் (தோற்றம், நிலை பேறு, ஒடுக்கம் என்ற செயலுக்குக் கட்டுப்படாது, பிறப்பு இறப்பு இல்லாதவனாக இருத்தலால்) இவ்வுலகில் காணப்படும் மாறுபாடு களால் [அதாவது இருளால்] தான் பற்றப்படாது இருப்பதோடு அவை களிலிருந்தும் மேம்பட்டு அந்த இருளை நீக்குகின்ற ஒளியாகவும் இருக்கின்றவன் எவனோ, இவ்வுலகத்தார் புரியும் வினைகளுக்கு ஏற்ப அதன் பயனாகிய புண்ணிய பாவங்களை வரும் பிறவிகளில் ஊட்டுகின்ற வனும், [உயிர்களில் 'என்று நீ அன்று நான்' எனப் பிரிப்பின்றிக் கலந் திருக்கும் பாச] மலங்களைக் களைந்து [அவ்வுயிர்கள் தன் திருவடிகளில் இரண்டறக் கலந்து] முத்திபெறக் காரணமான முதற் பொருள் எவனோ, அந்த உலக முதல்வனாகிய விநாயகப் பெருமானை மகிழ்வுடன் சரணம் அடைகின்றோம்.

இடர்கள் முழுதும் எவன் அருளால்
 எரிவீழும் பஞ்செனமாயும்
தொடரும் உயிர்கள் எவன் அருளால்
 சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு+ஊறு+இன்றிக்
 கருமம் எவனால் முடிவுறும்அத்
தடவு மருப்புக் கணபதி பொற்
 சரணம், சரணம் அடைகின்றாம்.

உரை: நாம் தொடங்கும் பணிகளை முடிக்க முடியாதபடி வருகின்ற தடைகள் யாருடைய அருளால் தீயின்கண் விழுந்த பஞ்சென விரைந்து அழியுமோ, பிறப்பு இறப்புகளுக்கு உட்பட்டுள்ள இவ்வுயிர்களை, எவன்

தன்னுடைய திருவருளினாலே தேவர்கள் வாழ்கின்ற சுரலோகத்தை அடையச் செய்வானோ, [சிவபெருமான் முதலான] கடவுளர்க்கு வரும் இடையூறுகள் நீங்கி, எடுத்த செயல்கள் எவனால் (தடை நீக்கம் பெற்று) நிறைவுறுமோ அத்தன்மைகள் பொருந்தியவனும் பரந்த கொம்புகளை யுடையவனும் ஆகிய விநாயகப் பெருமானின் பொன் போன்ற திருவடிகளைச் சரணம் அடைகின்றோம்.

மூர்த்தி யாகித் தலம்ஆகி
முந்நீர்க் கங்கை முதலான
தீர்த்தம் ஆகி அறிந்தறியாத்
திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான் எவன்அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றாம்.

உரை: சிலைவடிவாகவும், தலவடிவாகவும், கடல், கங்கை, காவிரி போன்ற புண்ணிய தீர்த்தங்களாகவும் ஆகி, அறியும் திறத்தினாலும் [புத்தி] அறியாத தன்மையினாலும் [அபுத்தி-அதாவது குழந்தைகள் மீது நாம் புண்ணிய தீர்த்தங்களைத் தெளித்தாலும், அக்குழந்தைகள் அப்புனித தீர்த்தத்தின் தன்மையை அறியாதிருத்தல்] உயிர்களுக்குச் சிவ புண்ணியத்தினால் வரும் இன்பத்தை நுகர்வித்து (ஆர்த்தி) உயிர்களின் அறியாமையை நீக்கி, எப்பொழுதும் அவ்வுயிர்களின் அறிவை வளர்த்து வருபவன் எவனோ, அங்ஙனமாகிய தொழிலையுடைய கருணை நிறைந்த விநாயகப் பெருமானை, அவருடைய உண்மையான சிறப்புக்களைப் புகழ்ந்து சரண் அடைகின்றோம்.

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவின்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றாம்.

உரை: இவ்வுலகத்திலுள்ள உயிர்கள் செய்யும் செயல்களுக்கு முதலாக இருக்கின்றவன் எவனோ, செய்யப்படும் செயல்களுக்கு மூலப் பொருளாக இருக்கின்றவன் எவனோ, சந்தேகத்திற்கு இடமின்றித் துணிந்து கூறப்படுகின்ற, உயிர்கள் செய்யும் செயல்களின் பலனாக இருப்பவன் எவனோ, உய்வதற்கு ஏதுவான வினையின் பயன் விளைகின்ற பொழுது அதனைத் தக்க பருவத்தில் தருகின்றவன் எவனோ, அந்த உண்மையான முதல்வன் ஆகிய விநாயகப் பெருமானை அன்பு செய்து சரண் அடைகின்றோம்.

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன், விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன், விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன்எவன், எண்குணன்எவன் அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்ரும்.

[விகிர்தன் = போகி-வேகி(வீரன்)-யோகி ஆக வெவ்வேறுபட்ட செயல்களையுடைய ஒருவன்]

உரை: மறைகள் அளவிட்டு அறியப்புகுந்தும் அறிதற்குக் கூடாத வெவ்வேறுபட்ட செயல்களையுடையவன் எவனோ, மேன்மை பொருந்திய மறைகளின் முடிவாக இருக்கின்ற உபநிடதங்களில், ஆடல் பயிலுகின்ற (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனப்படும்) ஐந்தொழில் முதல்வனுகச் (பஞ்சகிருத்திய கர்த்தாவாகச்) சொல்லப் படுகின்ற தெளிவுடையவன் எவனோ, விளங்குகின்ற திருவருள் முடிவில் (அபரநாதம், அபரவிந்து) மாயையோடு சம்பந்தமில்லாது ஞான மாத்திரமாக நிற்கின்றவனும், பரநாத முடிவில் இன்பமயமாக விளங்கு கின்றவனும் ஆகிய இறைவன் எவனோ, [தன்வயத்தனுதல், தூய உடம்பினனுதல், இயற்கை உணர்வினனுதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களிலிருந்தும் நீங்குதல், பேரருள் உடைமை, முடி வில்லாத ஆற்றல் உடைமை, எல்லையற்ற இன்பம் உடைமை எனப்படும்] எண் குணங்களையுடைய இறைவன் எவனோ, ஞானத்திற்குக் காரணமாகிய முதற் பொருளாக இருக்கின்ற அந்த விநாயகப் பெருமானைப் புகழ்ந்து சரணம் அடைகின்ரோம்.

மண்ணில் ஓர் ஐங் குணமாகி
வதிவான் எவன், நீரிடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன், தீயில்
மூன்ருய் நவில்வான் எவன், வளியில்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன், வானிடை ஒன்ரும்
அண்ணல் எவன், அக் கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்ரும்.

உரை: நிலத்தில் [காண்டல், கேட்டல், உண்டல், உயிர்த்தல், உற்றறிதல் ஆகிய] ஐந்து குணங்களை உடையவனுகவும், நீரில் [காண்டல், கேட்டல், உண்டல், உற்றறிதல் ஆகிய] நான்கு குணங் களாக இருப்பவனும், தீயில் [காண்டல், கேட்டல், உற்றறிதல் ஆகிய] மூன்று குணங்களாகச் சொல்லப்படுகின்றவனும், காற்றில் [கேட்டல், உற்றறிதல்] என்ற என்ற இரண்டு குணங்களை உடையவனுகஎண்ணப்

படுகின்றவனும், ஆகாயத்தில் கேட்டல் என்ற [சப்த அதாவது நாத வடிவாக மட்டும் விளங்குகின்ற] ஒரே ஒரு குணத்தை மட்டும் கொண்டு விளங்குகின்ற அண்ணலுமாகிய விநாயகப் பெருமானை அன்புடன் சரணம் அடைகின்றோம்.

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற்கு + அரிய பரன் யாவன்
பாச அறிவும் பசுஅறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும்
பாற்றிமேலாம் அறிவான
தேசன்எவன்அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றும்.

உரை: பாச ஞானத்தினுலும் பசு ஞானத்தினுலும் உணரப்படாத இறைவன் எவனோ, பாச, பசு ஞானங்களைப் பொருந்தும்படியாகச் செலுத்துகின்றவன் எவனோ, பாச, பசு ஞானங்களை விலகச் செய்து மேலான அறிவொளியாக விளங்குகின்றவன் எவனோ, அந்த விநாயகப் பெருமானை, எங்கள் அன்பு விளங்கும்படியாகச் சரணம் அடைகின்றோம். [அவன் உயிர்களுக்குப் பாச பசு ஞானங்களை முன்னர் வழங்கி, இறுதியில் சிவஞானத்தை வழங்குவோன். பாச பசு ஞானங்களால் அறியப்படாது--சிவஞானத்தில் விளங்கும் பேரின்ப வடிவினன்].

இவ்வாறாகத் தோத்திரம் செய்து வணங்கித் "தேவரீர் திருவருளால் எங்கள் பிறப்பு, உயிர், குணம், தருமம், தவம், தானம், விரதம், கலை முதலிய அனைத்தும் குற்றம் நீங்கிப் பரிசுத்தம் ஆயின. இனி நாங்கள் கிருதார்த்தர்கள் ஆகும்படி திருவருள் சுரக்க வேண்டும்" என வேண்டினர். அதற்கு விநாயகப் பெருமான் திருவுளம் மகிழ்ந்தார். அவர்கள் வேண்டிய வரங்களைத் தந்தார்.

"இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினம்மும்மைச்
சந்திகளில்தோத் திரம்செயினும்
சகல கருமம் சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம்பெறும் எண்
தினம் உச்சரிக்கில், சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும்"

"அன்பர்களே! நீவிர் நம்மை நோக்கித் துதி செய்த இத்தோத்திரங்களை, யாரொருவர் மூன்று தினம் காலை, நண்பகல், மாலை என மூன்று சந்தி நேரங்களிலும் துதி செய்தாலும் அவர்கட்குச் சகல கருமங்களும் சித்தியாகும். எட்டுத் தினங்கள் துதி செய்தால் சிந்தை மகிழும் சுகம் எய்துவார்கள். சதுர்த்தி விரதத்தில் எட்டுத் தடவை துதி செய்தால் அட்டமா சித்திகளும் வந்தடையும்" எனக் கூறி, மேலும்,

திங்களிரண்டு தினந்தோறும்
திகழ ஒருபால் முறையோதில்
தங்கும் அரச வசியம் ஆம்
தயங்கும் இருபத் தொருமுறைமை
பொங்கும் உழுவலால் கிளப்பின்
பொருவில் மைந்தர், விழுக்கல்வி
துங்க விறற்கை முதற்பலவும்
தோன்றும்" எனச் செப்பினர் மறைந்தார்

"அடியவர்களே, இரண்டு மாதங்கள் தினந்தோறும் ஒரு தரம் துதி செய்தால் அரசும் வசியமாகும். அவ்வாறே இருபத்தொரு முறை வழிபட்டால் அரசு, மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை எனும் எட்டு ஐசுவரியங்களும் உண்டாகும்" எனத் திருவாய் மலர்ந்து திருவுருக் கரந்தார்.

அதன்பின் அனைவரும் பெருமானுக்கு ஆலயங்கள் அமைத்து, அவ் வாலயங்களில் தாங்கள் தாங்கள் தரிசித்தவாறே திருவுருவங்களைச் சமைத்து, வழிபட்டுத், தத்தம் பதவிகளிற் சென்று வாழ்ந்திருந்தார்கள்.

இத்தகைய பெருமை வாய்ந்த இத்தோத்திராட்டகத்தை, வரும் விநாயகர் சதுர்த்தி (19-9-74) முதற்கொண்டு நாள்தோறும் பாராயணம் செய்து, விநாயகப் பெருமான் திருவருளுக்குரியவர்களாவோம்.

உ

வருக! இராமேஸ்வரம்

இராமேசுவரம் தீவில் அமையப்பெற்றுள்ள அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில் மனம் கவரும் புராதன சிற்பக்கலைக் காட்சிகளுடனும், மிகப்பெரிய பிரகாரங்களையும் கொண்டதாக விளங்குகிறது. இராமாயண வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ள இத்தலம் பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்ருக விளங்குவதுடன், வடக்கே காசியும், தெற்கே இராமேசுவரமும் என இந்துக்களுக்குத் தலைசிறந்த இரு பெரிய புண்ணிய தலங்களாகும்.

இத் திருக்கோயிலில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. சேவார்த்திகள் வசதியாகத் தங்கவும், முறையாக வழிபடவும், இங்கு முக்கிய மாகக் கருதப்படும் இலக்குமண தீர்த்தம், தனுஷ்கோடி, கந்தமாதன பர்வதம் முதலான இடங்களுக்குப் போவதற்கு வசதியும் இக்கோயில் நிர்வாக அதிகாரியை அணுகுவதன் மூலம் அடையலாம்.

இக்கோயிலில் ஸ்ரீ இராமநாதசுவாமிக்கும், ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்பாளுக்கும் நடைபெறும் கோடி அர்ச்சனையில் சகஸ்ரநாமம் ஒன்றுக்கு ரூ. 10/– வீதம் கட்டணம் செலுத்தி அர்ச்சனை செய்து திருவருள் பிரசாதமும், வெள்ளிக் காசும் பெறலாம்.

இக்கோயிலில் நடைபெற்று வரும் மாபெரும் திருப் பணிக்குத் தாராளமாக நன்கொடை வழங்க வேணுமாய் வேண்டப்படுகிறது. இந்த நன்கொடைக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரம்,
தமிழ்நாடு.

நிர்வாக அதிகாரி
அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

உண்மை விளக்கம்-நாதாந்த நாடகம்

சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உண்மை விளக்கம் என்னும் அருணூல், மெய்கண்ட தேவ நாயனார்க்கு மாணுக்கருள் ஒருவராய மனவாசகங்கடந்தார் அருளியது. உண்மை என்பது சிவபுண்ணியம். சிவபுண்ணியம், அபுத்தி பூருவ புண்ணியம் புத்தி பூருவ புண்ணியம் முதலாய பத்து வகையுமாம். பாற் கடலுட் சிறிது கொண்டு இது பாற்கடல் எனல் போலச் சிவபுண்ணியத் துள் எச்சிற்றளவும் அதனின் வேருகாது. உபாயச்சரியை முதலிய நான்கும், உண்மைச் சரியை முதலிய நான்கும், உண்மை ஞானத்தின் உட்பிரிவாகிய தத்துவ ரூபம் முதலிய பத்தும் எல்லாம் சிவபுண்ணியமே. அம்முடிவாகிய சிவபுண்ணியத்தின் பயனே சிவாநந்தாநுபவமாம்.

அச்சிவாநந்தம் உண்மை ஞானத்தால் அன்றி வேறு எதனுனும் உயிர்க்குக் கிடைக்காது. உண்மை ஞானமே சிவாநந்தத்திற்குருவம். அந்த ஞானம் தன்னை ஆன்மாக்கள் அறியவும் அடையவும், நாதத்தை யும் எழுத்தொலியையும், சொல்லொலியையும், சொற்பொருளையும் உருவாகக் கொள்கின்றது. கொண்டால்தான் உயிர்கள் அறிவு வளரப் பெறும். அறிவுக்கு உருவம் உயிரெழுத்தும், மெய்யெழுத்தும், ஆயுத எழுத்தும் ஆகும். தமிழல்லாத மொழிகளுள் அவ்வவற்றின் எழுத்து முதலியன உருவமாகும்.

ஏழிசையும் (சரிகமபதநி) நாதத்தின் ஒருசார் பிரிவாய இசைக்குருவம். இந்த அடிப்படையில் மேல் எழுதப்படும் பொருளை நோக்கி, அப் பொருளினுருவம் இன்னது என்றுணர்தல் கடனுகும். விளக்கம் என்ற ஒரு பயனை மட்டும் கருதிச் சிவபரஞ்சுடரே இதை விளக்குவதாக எழுது கின்றேம்.

சிவனுரை

யான் ஊரும் பேரும் உருவும் திருவும் இல்லேன். என்நிலை ஒழிவற நிறைந்து அசைவற நிற்கும் முடிவாய முழுப் பெருமையது. பரபிரமம் என்று இந்நிலையைத்தான் குறிப்பது. அகளமாயிருக்கும் இந்நிலை யினும் கீழிறங்கிச் சகளமாகி வந்து உயிர்க்கு உணர்த்துகின்றேன். உயிர் வேறு வகையில் உணர வழியில்லை. என்னை யானே உணர்த்தி வருகின்றேன். இப்படி யான் செய்யும் உதவியை உயிர் அறியவில்லை. உணர்த்தும் இயல்பு எனது, உணரும் கடன் உயிரது. நான் "அறிவிக்க அன்றி அறியா வுளங்கள்."

அறிவிக்க நான் நாதத்தில் நின்றேன். நாதம் விந்து இல்லாமல் அறிவை விளக்காது. விந்து எழுத்தாகும். எழுத்துருவில் நின்றேன். எழுத்துச் சொல்லாகும். சொல்லோ பொருளை யுணர்த்துங் கருவி. அச்சொல்லும் பொருளுமானேன். முழுமடவரும் அறிவை அடைய எழுத்து, சொல், பொருள் என நிற்கின்றேன். நின்றும் அவர் மடனின் தீர்ந்து அறிவினை அடைந்திலர். முற்றுணர்வினர்க்கு நான் எழுத்துக் களாயும், சொற்களாயும், பொருள்களாயும் நிற்றல் நன்கு விளங்கும். அவ்விளக்கமே உண்மை விளக்கம்.

அவ்விளக்கத்துள், நாதாந்த நாடகம் என்று ஒன்றுண்டு. அதனை நான் செய்கின்றேன். அதைச் செய்யுங்கால் என் உருவம் நமசிவாய, சிவாய நம, சிவாய, வசி, சி எனப் பலவகைப்படக் கொள்வேன். இந் நாதாந்த நாடகத்தை உயிரில் நின்று ஆடுகின்றேன்.

ஆடும்படி கேள். என் அடியில் மாயை (ந), என் வயிற்றில் ஆணவம் (ம), தோளில் யான், (சி), வாயில் என் (அருள்--) முழுவல்லமை (வா), முடியில் உயிர் (ய).

மாயையாகிய காரணப்பொருள், ஆணவமாகிய மூலமலம், யான், என் ஆற்றல், உயிர் இவ்வைந்தும் என் உருவம் எனக் கொண்டு உணர்வது உயிர்க்கு நன்று. மாயை இல்லையேல் ஆணவம் தேயாது. ஆணவத்தைப்போக்க யான் அன்றி எதற்கும் இயலாது. என் ஆற்றல் எல்லாம் செய்ய வல்லது. யான் எதையும் ஆற்றல் கொண்டே செய்வேன். எனக்குத் தனியாகச் செயலும் அறிதலும் விரும்புதலும் இல்லை. என்னை மவுனம் என்றுணர்தலே வீடு வேண் டும் உயிர்க்கு முறைமையும் கடன்மையும் உரிமையும் ஆம். மவுனம் ஞானத்தை வரம்பாக உடையது. மோனம் என்பது ஞான வரம்பு. அந்த ஞானத்தைத் தமிழில் உணர்வு என்றுணர வைத்தேன். அவ் வுணர்வாதலே உயிர்க்கு முதல் வேலை.

நமசிவாய இவ்வைந்தும் எழுத்தாகத் தோன்றினும் எழுத்தல்ல. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெயர்ச் சொல்லாகிப் பொருளை அறிவித்தும் சொல்லல்ல. சொல்லெல்லாம் என் வல்லமை. பொருளெல்லாம் யான். இரகுவமிசத்துக் காப்புச் செய்யுளுள் இவ்வுண்மையைக் காளி தாசன் நாக்கில் இருந்து புலப்படுத்தினேன். அதன் முன்னரே, இடைக்காடன் பிணக்குத் தீர்க்க அவன் நாக்கில் என் முன் சொல்ல வைத்துப் பாண்டியனை உணர்வித்தேன்.

மாயை, ஆணவம், யான், என் ஆற்றல், உயிர் என்று நின்ற வண்ணம் என்(தூல-) பருவுருவம். இவ்வுண்மை விளங்கும்பொருட்டு, பக்குவம் உற்ற உயிர் தன்னுடலில், முழங்காலில் ந; வயிற்றில் ம; தோளில் சி; வாயில் வா; தலையில் ய என்று தொட்டு (நியாசம் பண்ணிக் கொண்டு) யானே தலைவன் என்று கருதிக்கொண்டு இருத்தல்

வேண்டும். இவ்விருப்பு நிகழ நிகழ நாளடைவிலே யான் தலைமையேன் அல்லேன் என்றுணரும். எனக்கு மேல் ஒன்று தலைமையுடையது உண்டு என்றுணரும். உணர்ந்து, அதையே சார்ந்து, அதன் தலைமையில் தான் அடிமையாயிருக்கும். ந+ம இரண்டும் நீங்கிய அவ்விருக்கையில் சிவாய நம என்று ஐந்து நின்ற நிலையில் ந+ம இரண்டும் நீங்கிய நிலையில் வந்த கள்ளத் தலைமையே யான் முதல் என்ற தலைமை. இது தகாது எனக்கு மேலாக ஒன்று உண்டு. அதுவே தலையாயது. அதற்கு அடிமை யான் என்று உணரும் உயிர். அவ்வாறு உணர்ந்தது ஆன்ம தரிசனம். அப்படி உணரத்தந்தது என் உருவம் (சிவரூபம்). யானே தலைவன் என்று நின்ற உயிரது நிலை நின்மல சாக்கிரம். என்னுருவம் (சிவரூபம்) தோன்றத் தன்னைக் கண்டு நின்றது (ஆன்ம தரிசனம்) நின்மல சொப்பனம்.

இங்குச் சிவாய என்று நின்று ("மலம் அற்ற உண்மை") அநுபவம் வளரப் பெறல் உயிரது கடன். ய(-உயிர்) வா (அருள்) தலைமை என்றுணர்ந்து அதற்கு அடிமையாய் நின்று பயிலும் உயரிய நிலை வளரும்.

இது அருளே முதல் என்று நின்றுணரும் அநுபவ நிலை. இதிலே அவ்வருளின் செயலெல்லாம் எனக்கு உள. யான் ஐந்தொழிலும் புரிவேன். முற்றும் உணர்வேன். முற்றுத் தொழிலும் முற்றுணர்வும் உடையேனெனத் தன்னைத் தானே மதிக்கும் போலிநிலை தோன்றும். அத்தோற்றம் நிலையாது. விரைந்து நீங்கும். இது நின்மல சுழுத்தி. அருட்செயலைப் பெற எண்ணி நீங்கல்.

பின்னர், உயிர் அருளாய் விடும். ஆன்மா என் வல்லமையாய் விடும். இது நின்மல துரியம். அருளாய் விடுதல் இது.

என் வல்லமையான உயிர், யானுவது எளிது. கண்ணொளி போன்ற உயிர், கதிரொளி போன்ற (என்) வல்லமையாய் விட்டது. விட்டால் அக்கதிரொளி கதிரவனுவது எளிதாதல் போல, என் வல்லமையாக நின்ற ஆன்மா யானுவது எளிது. நிச்சம் என்னை நெஞ்சில் மன்னுவித்து யானுகி நின்ருன். இதுவே நின்மலதுரியாதீத நிலை, பரமமுத்திநிலை.

சிவனுரை முற்றும்.

இவ்வுண்மையை மனவாசகங்கடந்தார் அருளிய உண்மை விளக்கம் என்னும் அருணூலில், 'நாதாந்த நாடகம்' என்னும் பகுதியில் உள்ள திருவெண்பாக்களை (30-38) நோக்கித் தெளிதல் வேண்டும். அநுபவ ஞானம் எய்த வேண்டின், உபதேசம் பெற்று நின்று உண்மையை அடைக.

—:o:—

மணிவாசகர் தமிழ்

புலவர் இ. சுந்தரமூர்த்தி, எம்.ஏ. டிப். மானிடவியல்.,

தமிழொடு இசைபாடல் மறந்தறியாத சமயக் குரவர் நால்வரின் பாடல்கள் தமிழுக்கும், தமிழருக்கும் வாய்த்த அரும்பெருஞ் செல்வங்கள்; பத்தித் தமிழையும், பரமனையும் பாடும் பைந்தமிழ்ப் பாக்கள்; ஊனையும் உள்ளத்தையும் உருக்கும் ஒள்ளிய தீஞ்சுவைப் பாடல்களும் இவையே யாம். அப்பரும், சுந்தரரும், ஆளுடைப் பிள்ளையும் அருள்மணி வாசகரும் இத்தெய்வத் தமிழ்த் திருநாட்டில் தோன்றிலரேல் சைவ சமயம் தாழ்ச்சியுற்றிருக்கும் என்பர் ஆன்றோர். தெய்வத்தமிழ் மலர் களால் இறைவனை அருச்சித்து வழிபட்ட இவர்தம் பெருமை எண்ணு தற்கும் எழுதுதற்கும் எளிதன்று.

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகரும்-முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூ லெங்கே
எந்தைபிரா னஞ்செழுத் தெங்கே

என்னும் பாடலே இவர்தம் மேன்மையையும்-இன்பத்தமிழாலே மறை யோதிய மாட்சியையும்-இம்மன்பதைக்கு இனிதுணர்த்தும். சைவ சமயத்தை மட்டுமன்று; தமிழ் மொழியையும் வாழவும் வளரவும் வைத்த வள்ளற் பெருமான்களும் இவர்களே யாவர்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, நினைந்து நினைந்து உருகி, நெகிழ்ந்து நெகிழ்ந்து பாடிப் பைந்தமிழையும், பத்தித்தமிழையும் வளர்த்த பெருமான்களுள் ஒருவரான மணிவாசகப் பெருந்தகை ஒருவாத புகழுடைய திருவாதவூரிலே பிறந்தவர்-அரிமர்த்தன பாண்டி யனிடம் 'தென்னவன் பிரம்மராயன்' என்னும் பட்டத்தைப் பெற்று ஆளுநர்க்கு உதவியாய் இருந்து பின்னர் மெய்ப்பொருளை நாடி, நாட் டிற்கு நல்லன செய்த வல்லவர். அகிலம் போற்றும் ஆட்சியாளராக விரும்பாது, ஆண்டவனையே பாடும் அன்புள்ளம் படைத்த அருளாள ராக வாழ விரும்பினர். அதனாலன்றோ ஆண்டவனும் இவர்தம் அன்பு நினைந்து அருள்புரிந்து அதிசயங்கள் பலவும் செய்தார். 'பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்பரிந்து' ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கியுலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரியும் சிவபெரு மானின் இன்னருளுக்கு உரியவரானார். பிட்டுக்கு மண் சுமந்த பேரரு ளாளனின் அருள்பெற்ற காரணத்தால் அவருடைய உள்ளத்தினின் றும் முகிழ்த்த சொற்கள் நறுமண மலர்களாயின; பெரும் பொருள் பொதிந்த பேரின்ப நீரூற்றுக்களாயின; முத்தமிழ்க்கடலில் மூழ்கி எடுத்த முத்துக்களாயின; முன்னவரும் பின்னவரும் போற்றிப் போற்றிப் பாடும் மூவா இளமைத் தமிழ்ப்பாவாக மலர்ந்து முத்திதரும் பேற்றினைப் பெற்றன.

இறைவன், இவருடைய பாடல்கள் மாணிக்கம் போன்று இருந்தமை யான், "மாணிக்கவாசகர்" என்றழைத்தனன். கூத்தப்பெருமானே தம் திருக்கரத்தால் இவர்தம் வாசகங்களை எழுதியதாகக் கூறுவர். அருள்

நூல்களுள் தலையாயதான 'திருவாசகம்' என்னும் தெய்வத் திருமறை மணிவாசகரின் மணிமொழியே. மனங்கனிய மலங்கெடுக்கும் மாண்புடையது. இருளகற்றி எஞ்ஞான்றும் இன்பம் நல்கும் இயல்பினது இச்செந்தமிழ்ப் பாமாலையே.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வோரைப் பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி ஆளும் அத்தனிடத்து என்றும் மாறாத அன்பு பூண்டவர். இறைவனிடத்து அவர் மனமுருகி வேண்டும் பாடல்கள் படிப்போர் உளத்தைப் பிணிக்கும் பான்மையின.

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத்து அமர்ந்துறையும் கூத்தாவுன் குறைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே

என்னும் பாடல் பொருளும், பொலிவும் நிறைந்ததாகும். உற்றாரையும், ஊராரையும், கற்றாரையும் மற்றோரையும் விரும்பாது-வேண்டாது-கூத்தனது தெய்வத் திருவடிகளையே விரும்பி வேண்டினார்.

இறைவனின் இன்னருள் கிடைக்கப்பெற்ற பின்னர் அவனை விட்டகலாத நெஞ்சத்தினராய்,

வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பிறப்புச் சிவம்
வேண்டார் தமை நாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன்மன்னு
திருப் பெருந்துறை யிறைதாள்
பூண்டேன் புறம்போகேன் இனிப்
புறம் போகலொட் டேனே

என்று பாடுவார்.

வைணவப் பெரியாருள் ஒருவராகிய தொண்டரடிப் பொடியாழ்வாரும் இத்தகைய உளநிலையில் காரொளி வண்ணனிடத்துக் கதறி வேண்டுவதும் இங்கு நினைவுறத் தக்கதாம்.

ஊரிலேன் காணியில்லை; உறவுமற் றொருவரில்லை
பாரில்நின் பாதமூலம் பற்றினேன் பரமமூர்த்தி
காரொளி வண்ணனே கண்ணனே கதறுகின்றேன்
ஆருளார் களைகண் அம்மா அரங்கமாநகருளானே

என்பது அவர்தம் பாட்டு. ஊரும், உறவும் இல்லாது கார்மேக வண்ணனையே பற்றுதலாகக் கொண்டு வாழ்ந்த இவர், 'இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்; அரங்கனின் அருட்சுவையே வேண்டுவேன்' என்பார். இங்ஙனம் எல்லா அருளார்களும் மனங்கனிந்து பாடிய பாடல்களை இன்னும் தமிழிலக்கியத்தில் பரக்கக் காணலாம்.

மணிவாசகப் பெருந்தகை பாடிய திருவெம்பாவைப் பாடல்கள் பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடியவை; இலக்கிய நயமும் எழிலும் ஏற்றமும் பெற்றவை நாடகப்பாங்கும், நவில்தொறும் இன்பம் பயக்கும் இலக்கியச் சுவையும் பொருந்தியவை. "வீடும் நாடும் வாழ வேண்டும்;இல்லறம் நல்லறமாக நல்ல கணவரைக் கன்னியர் மணம் புரிந்து நல்லன போற்றுதல் வேண்டும்" என்னும் உயர்ந்த கருத்தையும், அரிய தத்துவத்தையும் பெற்றுப் பொலிவான இவ்வருட் பாடல்கள்.

திருவெம்பாவையின் முதற்பாடல் இறைவனின் திருப்பெயரைக் கேட்டவுடன் ஏற்படும் மன நிலையை, மங்கையரின் உள நிலையைக் கூறுவதாய் அமைந்துள்ளது.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே ! வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலும், விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள், கிடந்தாள்; என்னே ! என்னே !
ஈதேஎம் தோழிபரிசு ஏலோர் எம்பாவாய் !

இறையருளை நாடும் உணர்வும் நல்லருள் வேட்கையும் இப்பாடலில் பொங்கித் ததும்புவதைக் காணலாம். இத்தகைய தெய்வத் தீந்தமிழ்ப் பாடலை நாள்தோறும் ஓதுவார் நெஞ்சமும் நெகிழும் என்பது கூறவும் வேண்டுமோ?

என்புதோல் போர்த்த உடலும், உயிரும் உருகுமாறு, கண்ணீர் வெள்ளம் பெருகுமாறு செய்ய வல்லன மணிவாசகரின் மணிமொழிகள். மணிவாசகப் பெருமானே கண்ணீர் வெள்ளம் பாயப் பாடும் பான்மையர் என்பதைப் பரஞ்சோதி முனிவர் 'அழுதடி அடைந்த அன்பன்' என்று கூறுவர். கிறித்தவப் பாதிரியாராக விளங்கிய போப் பெருமகனாரே தம் திருவாசக மொழிபெயர்ப்பில் தாம் உருகி உருகிக் கண்ணீர் வாரப் படித்ததைக் குறித்து எழுதியுள்ளார். கல்நெஞ்சமும் உருகும் கனிவார்ந்த சொற்களைக் கொண்டவை இவர்தம் பாடல்கள். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்' என்பது முதுமொழி. இதனை ஓதினால் 'கருங்கல் மனமும் கரைந்துருகும்' என்பர். இராமலிங்க அடிகளார், "நற்கருப்பஞ்சாற்றிலே தேன் கலந்து, பால் கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, என் ஊன் கலந்து, உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே" என்று மணிவாசகத் தமிழின் மாண்பை இனிதுணர்த்துவார்.

இத்தகைய தெய்வத் திருமலர்களால் நாள்தோறும் பரம்பொருளை அருச்சித்து வழிபாடியற்றும் பக்தி உளம் நன்கு வளரும்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் புராணம்

கொற்றவன்குடி உமாபதிசிவம் அருளிச்செய்த மூலமும்

திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணுமலை ஆதீனம்
ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் அருளிய பதவுரையும்

பிரதி செய்தவர் : சேக்கிழார்தாசன் இராமசேஷன்

இறைஞ்சியம்பலவர் பாததாமரை
யிறைஞ்ச வெண்ணிவரன் முறைமையா
லறஞ்சிறந்தமுனி சேவைகாவலனு
மாறைஞ்னூறு மறையோர்களுந்
துறஞ்சிறந்தமட பதிகளுந்தொடர
வந்து மன்னனரி பிரமர்பால்
மறைஞ்சு நின்றபொருள் வெளிப்படக்கனக
மன்றினின்றபடி கண்டனன். 62

(இ-ள்): இறைஞ்சியம்பலவர் பாததாமரை யிறைஞ்சவெண்ணி-வணங்கிக் கொண்டு நடேசப்பிரான் திருவடித் தாமரைகளை வணங்க நினைந்து; வரன்முறைமை யாலறஞ் சிறந்த முனிசேவை காவலரும்-வரன் முறையாகச் சைவ மார்க்கத்திற் சிறந்த முனிவராகிய சேக்கிழார் நாயனுரும்; ஆறைஞ்னூறு மறையோர்களும்- தில்லைவாழந்தணர் மூவாயிரவர்களும்; துறஞ்சிறந்த மடபதிகளுந் தொடரவந்து-துறவறத்திற் சிறந்த மடாதிபதிகளும் தம்மைத் தொடர்ந்து வரவந்து; மன்னன் அரிபிரமர்பால் மறைஞ்சு நின்றபொருள்-அநபாய சோழன் திருமால் பிரமன் என்னும் இவர்களிடத்தில் மறைந்து நின்ற பரம்பொருளான சிவபிரான்; வெளிப்படக் கனகமன்றினின்றபடி கண்டனன்-வெளியாகச் சிற்சபையில் நடனஞ் செய்து நின்றருளுந் திருக்கோலத்தைத் தெரிசித்தனன். (எ-று).

துறவறம் என்பது துறமெனத் திரிந்து நின்றது. வரன் முறைமையால் என்றதனுல் அநபாய சோழனும் சேக்கிழார் நாயனுரும் அவரோடு தில்லைவாழந்தணர்களும் அவர்பின் மடபதிகளும் எனக் கூறியவாறு கொள்க.

கண்டகண்ணருவி தாரைகொள்ளவிரு கைகளஞ்சலி கொளக்கசிந்
தெண்டரும்புளக ரோமகூபமெழி வின்பவாரிகரை புரளவாய்
விண்டதூமொழிகள் குழறவன்பினெடு விம்மிவிம்மியருண் மேலிடத்
தெண்டனுகமுன் விழுந்தெழுந்துநனி செம்பியன்பரவ வெம்பிரான்.

(இ-ள்): கண்டகண்ணருவி தாரை கொள்ள-தெரிசித்த கண்ணினின்றும் சொரிகின்ற நீர்த்துளியாகிய அருவியானது இடையீடின்றிப் பொழியவும்; இருகைகள் அஞ்சலி கொள-இருகைகளும் அஞ்சலி கொள்ளவும்; கசிந்து எண்டரும் புளக ரோம கூபமெழ-மனமுருகி எண்ணத்தக்க புளகாங்கிதமாக மயிர் சிலிர்க்கவும்; இன்பவாரி கரை புரள-ஆனந்த வெள்ளமானது பெருக்கெடுக்கவும்; வாய்விண்ட தூமொழிகள் குழற-வாக்கினின்றும் உதித்த தூயசொற்கள் குழற

வர்; அன்பினெடு விம்மிவிம்மி யருண் மேலிட-அன்புடனே யதிகம் விம்மிதமடைந்து திருவருள் மேலிடாய்; தெண்டனுகை முன் விழுந் தெழுந்து-திருமுன்னர் அட்டாங்க பஞ்சாங்கமாக வணங்கி எழுந் திருந்து; நனி செம்பியன் பரவவெம்பிரான்-அநபாய சோழன் மிகத்துதிக்க எமது பிராணுகிய நடேசர் (எ-று).

சேக்கிழானமது தொண்டர்சீர்பரவ நாமகிழ்ந்துலக மென்றுநம்
வாக்கினலடி யெடுத்துரைத்திட வரைந்து நூல்செய்து முடித்தனன்
காக்கும் வேல்வளவ நீயிதைக்கடிது கேளெனக் கனகவெளியிலே
யூக்கமான திரு வாக்கெழுந்தது திருச்சிலம்பொலியுமுடனெழ.

(இ-ள்): காக்கும் வேல்வளவ-உலகுயிர்களைக் காக்கும் வேற்படையை யுடைய சோழனே; சேக்கிழானதுமது தொண்டர்சீர்பரவ-சேக்கிழான் நமது அடியார்கள் சிறப்பைத் துதிசெய்ய; நாமகிழ்ந்து நம் வாக்கினல்-நாம் மகிழ்வுற்று நமது வாக்கினல்; உலகமென்றடியெடுத்துரைத்திட வரைந்து-உலகெலாம் என்று முதலடி எடுத்துக் கொடுக்கக் கொண்டு; நூல் செய்து முடித்தனன்-புராணஞ் செய்து நிறைவேற்றினன்; நீ யிதைக் கடிது கேளென-அதை நீ விரைவிற் கேட்கவென்று; கனக வெளியிலே யூக்கமான திருவாக்கெழுந்தது-கனகசபையின்கண் யார்க்கும் மகிழ்ச்சி விளைக்கும்படியான ஒரு அசரீரி வாக்கு உண்டாயிற்று; திருச்சிலம்பொலியுமுடனெழ-அவ்வோசையுடன் குஞ்சிதபாதத் திருச்சிலம்பினேசையுங்கூட வுண்டாக. (எ-று).

மன்றுளாடி திரு வாய்மலர்ந்தமொழி யுஞ்சிலம்பொலியு மன்றிலே
நின்றமானிடர் செவிப்புலன்புக நிறைந்த தன்றியு நிலத்தின்மே
லொன்றிநின்றுயர் சராசரங்களடை யக்கசிந்துருகி யோலிடக்
குன்றிலங்குதிர டோணரேந்திரபதி குதுகுலித்துள மகிழ்ந்தனன்.

(இ-ள்): மன்றுளாடி திருவாய் மலர்ந்த மொழியுஞ் சிலம்பொலியும்-நடேசப்பிரான் திருவாய் மலர்ந்தருளிய அசரீரிவாக்கும் திருச்சிலப்பி னுதமும்; மன்றிலே நின்ற மானிடர் செவிப்புலன்புக நிறைந்த தன்றியும்-சிற்சபையின்கண் நின்றிருந்த அடியார்களுடைய காதுகளில் கேட்க நிறைந்ததல்லாமலும்; நிலத்தின்மேலொன்றி நின்றுயர் சராசரங்களடைய-இவ்வுலகத்தின்கண் பொருந்தி நின்ற உயர்ந்த சராசரங்களெல்லாம்; கசிந்துருகியோலிட-மனம் நெக்கு விட்டுருகி யாரவாரிக்க; குன்றிலங்கு திரடோணரேந்திரபதி-மலை போற்றிரண்ட தோளையுடைய அநபாய சோழனும்; குதுகுலித்துள மகிழ்ந்தனன்-குதூகலங் கொண்டுள்ளம் மகிழ்ச்சி யடைந்தனன். (எ-று). இம்மூன்றுங் குளகம்

அந்நாதம் பரத்தலால் ஓரறிவுயிரும் கசிந்துருகிற்றென்க. மகிழ்ச்சியாலோலிடல் ஓரறிவுயிர்க்கின்மையின் ஏற்றபடி கொள்க. குதுகுலித்தல்-விதப்பினல் உண்டாகும் உடம்பின் பூரிப்பு. உரோமாஞ்சிதமுமாம்.

தொண்டர் தொண்டுசெய் புராணகாதைமதி
  சூடுநாதர் திருவருளினல்
விண்டநீதிபுனை சேக்கிழார் முனி
  விரித்துரைத்தகதை கேட்பதற்
கண்டவாணரடி யாரெலாங்கடுக
  வருகவென்றுதிசை திசைதொறு
மெண்டயங்கரச னேடெடுத்தெழுதி
  யாளுமோலைகளு மேவினன்.

(இ-ள்): விண்ட நீதிபுனை சேக்கிழார் முனி-மநுச்சக்கரவர்த்தியினல் சொல்லிய நீதியைத் தெரிந்த சேக்கிழார் நாயனர்; தொண்டர் தொண்டுசெய் புராண காதை-அடியார் திருப்பணி செய்த சரித்திரக் கதையாகிய; மதிசூடு நாதர் திருவருளினுல்-இளம்பிறையைத் தரித்த நடேசப்பிரான் திருவருளினுல்; விரித்துரைத்த கதை கேட்பதற்கு-விரிவாகச் சொல்லிய திருத்தொண்டர் புராணத்தைக் கேட்பதற்கு; அண்டவாணரடியாரெலாம்-சிவனடியார்கள் யாவரும்; கடுக வருக வென்று-விரைவாய் வரக்கடவர்கள் என்று; எண்டயங்கரசன்-எத்திக்கினுந் தன் கீர்த்தியைப் பரவச்செய்த அநபாய சோழன்; திசை திசைதொறு மேடெடுத்தெழுதி-திக்குகள்தோறும் திருமுகம் எழுதி; ஆளுமோலைகளுமேவினுன்-தூதுவர்களையும் அத்திருமுகத்தையும் அநுப்பினுன். (எ-று).

(வேறு)

கவச மணிந்த சனங்களு மிங்கித முங்கம்பித்
தவச முறுஞ்சிவ சிந்தையு மன்பக லாமேன்மைத்
தவச ரிதத்தொழி லுஞ்சிவ சாதன முஞ்சாரச்
சிவச மயத்தவர் யாவரும் வந்து திரண்டார்கள்.

(இ-ள்): கவச மணிந்த சனங்களும்-விபூதி உருத்திராக்கமாகிய கவசத்தை யணிந்த அடியார்களும்; இங்கிதமுங்கம்பித்தவச முறுஞ்சிவ சிந்தையும்-ஒருவர்க்கொருவர் இனிமை பாராட்டுங்குணமும் உடம்பு நடுக்குற்றுப் பரவசம் அடையும்படியான சிவசிந்தையினையும்; அன்பகலா மேன்மை-அன்பு நீங்காத மேன்மையினையும் உடைய; தவசரிதத் தொழிலும்-சிவனடிமைத் தொண்டும்; சிவசாதனமுஞ்சார-முண்டனம் சடைமுதலிய சிவசாதனங்களும் பொருந்தும்படி; சிவ சமயத்தவர் யாவரும்-சைவசமயிகள் யாவரும்; வந்து திரண்டார்கள்-வந்து கூடினர். (எ-று).

வேதியர் வேத முழக்கொலி வேதத் தைத்தமிழா
லோதிய மூவர் திருப்பதி கத்தொலி யோவாமற்
பூதி யணிந்தர கரவென வன்பர் புகழ்ந்தோதுங்
காதியல் பேரொலி காரொலி போலொலி கைத்தேற.

(இ-ள்): வேதியர் வேத முழக்கொலி-மறையவர்கள் வேதமோதும் ஓசையும்; வேதத்தைத் தமிழாலோதிய மூவர் திருப்பதிகத்தொலி-அந்த வேதத்தைத் தமிழாற் கூறிய மூவர்கள் தேவாரத்தினேசையும்; ஓவாமற் பூதியணிந்து-நீங்காமல் திருவெண்ணீறணிந்து; அன்பர் அரகரவெனப் புகழ்ந்தோதும்- அடியார்கள் அரகர வென்று புகழ்ந்து துதிக்கும்; காதியல் பேரொலி-செவிக்கினிய பெரிய ஓசையும்; காரொலி போலொலி கைத்தேற-மேகத்தினெலி போலொலித்து அதையும் அடக்கி மேலிட. (எ-று).

பழுதக லத்திரு வலகுவி ருப்பொடு பணிமாறிக்
குழைவுபெ றத்திகழ் கோமய நீர்குளி ரச்செய்து
தழைபொதி தோரண முங்கொடி யுந்துகி லுஞ்சார்வித்
தழகு பெறத்திரு வீதி புதுக்கி யதன்பின்பு.

(இ-ள்): பழுதகல விருப்பொடு திருவலகு பணிமாறி-குற்ற நீங்க விருப்பத்துடனே திருவலகிட்டு; குழைவுபெறத் திகழ்கோமய நீர் குளிரச் செய்து-குழம்பாக விளங்குகின்ற கோமயங்கரைத்த நீரைத் தெளித்து; தழைபொதி தோரணமுங் கொடியுந்துகிலுஞ் சார்வித்து-தழைநெருங்கிய மலர்த் தோரணங்களும் கொடிகளும் மேல்விதானங் களும் அலங்கரித்து; அழகு பெறத் திருவீதி புதுக்கியதன் பின்பு-அழகு பொருந்திய வீதிகளை அலங்காரஞ் செய்து அதன் பின்பு. (எ-று).

(வேறு)

திருநெறித்தமிழ் வல்லபேர்கள் சிவாகமங்கள் படித்தபேர்
கருநெறிப்பகை ஞானநூல்பல கற்றபேர் மறைகற்றபேர்
குருநெறிக்குரி யோரிலக்கண லக்கியங்கள் குறித்தபேர்
பெருநெறிப்பல காவியங்கதை பேசவல்லவ ரனைவரும்.

(இ-ள்): திருநெறித் தமிழ் வல்லபேர்கள்-தேவாரத் திருமுறைகளில் வல்லவர்களும்; சிவாகமங்கள் படித்தபேர்-சிவாகமங்களை ஓதியுணர்ந் தவர்களும்; கருநெறிப்பகை ஞான நூல் பல கற்றபேர்-பிறவி வரும வழிக்குப் பகையாகிய பல ஞான நூல்களைக் கற்றுணர்ந்தவர்களும்; மறைகற்ற பேர்-வேத வித்துக்களாகிய மறையவர்களும்; குருநெறிக் குரியோர்-குரு உபதேசிக்கும் பாரம்பரிய நெறியில் நிற்பவர்களும்; இலக்கணலக்கியங்கள் குறித்தபேர்-இலக்கண இலக்கியங்களைக் கற்றவர்களும்; பெருநெறிப் பல காவியங்கதை-நன்னெறியையுடைய பல காப்பியங்களையும் புராணங்களையும்; பேசவல்லவரனைவரும்-எடுத்துச் சொல்ல வல்லவர்களும் ஆகிய இவர்களெல்லாரும். (எ-று).

(வேறு)

வள்ளலார் திருநடஞ்செய் மன்றின் முன்றின்
மறையவர்கோ மயசலத்தான் மெழுகித் தாபித்
தெள்ளருங்வெண் சுதையொழுக்கி யறுகாற் பீட
மிட்டதன்மேற் பசும்பட்டு விரித்துமீதே
வெள்ளைமடித் திட்டுமது மலருந்தூவி
விரைநறுந்தூ பங்கொடுத்தா தனங்கற் பித்துத்
தெள்ளுதமிழ்ச் சேக்கிழார் புராணஞ் செய்த
திருமுறையை யதன்மேல்வைத் திறைஞ்சிப் போற்றி.

(இ-ள்): வள்ளலார் திருநடஞ்செய் மன்றின் முன்றில்-நடேசப்பிரான் நடனஞ்செய்கின்ற சிற்சபைக்கு முன்னே; மறையவர் கோமய சலத் தான் மெழுகித் தாபித்து-தில்லைவாழந்தணர்கள் கோமயங்கரைத்த நீரால் திருமெழுக்கிட்டு; எள்ளரும் வெண்சுதை யொழுக்கி-அழகான கோலமிட்டு; அறுகாற் பீடமிட்டு-ஆறுகாற் பீடமமைத்து; அதன்மேற் பசும்பட்டு விரித்து-அதன்மேல் மிருதுவான பட்டை விரித்து; மீது வெள்ளை மடித்திட்டு-அதன்மீது வெண்பட்டு மடித்து அலங்காரமாக வைத்து; மதுமலருந்தூவி-தேனிறைந்த மலர்களையும் பரப்பி; ஆதனங்கற்பித்து-இவ்வாருகப் பிரணவாசனம் பூசித்து; தெள்ளு தமிழ்ச் சேக்கிழார் செய்த-தெள்ளிய தமிழ்வல்ல சேக்கிழார் நாயனர் திருவாய் மலர்ந்தருளிய; புராணத் திருமுறையை-திருத்தொண்டர் புராணத் திருமுறையை; அதன்மேல் வைத்து-அதன்மேல் வைத்து அருச்சித்து; விரை நறுந்தூபங்கொடுத்து-மணம் பொருந்திய நல்ல தூபதீபங் கொடுத்து; இறைஞ்சிப் போற்றி-வணங்கித் துதித்து, (எ-று). ஏ-அசை.

(தொடரும்)

இராமாநுசர்

வித்துவான் திரு. கா. அ. மணவாளன், எம்.ஏ., பி.ஓ.எல்.

(14)

ஆழ்வார் திருநகரி :

ஆழ்வார் திருநகரி பண்டைத் தமிழர்களின் நாகரிகத்துக்கும், பண்பாட்டுக்கும் ஒரு வளர்ப்புப் பண்ணையாகத் திகழ்ந்தது. வைணவர்கள் இரண்டு திருநகரியைச் சிறப்பாகப் போற்றுவார்கள். நம்மாழ்வார் வாழ்ந்த திருநகரியை ஆழ்வார் திருநகரி என்றும், திருமங்கையாழ்வார் வாழ்ந்த திருநகரியைத் திருவாலி–திருநகரி என்றும் கூறுவர். பொதுவாக வைணவர்களைப் பிரபன்னர் என்று கூறுவதுண்டு. இந்த நம்மாழ்வாரைப் பிரபன்ன திலகர் என்று தங்களுக்குரிய தனிப்பெருஞ் செல்வமாக வைணவர்கள் போற்றிவருகின்றனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் தாம்பிரபருணி ஆற்றங்கரையில் சுமார் ஐம்பது மைல் பரப்புள்ள வளமான நாட்டுக்கு, அக்காலத்தில் 'திருவழுதி வளநாடு' என்று பெயர் இருந்தது. அந்த வழுதிவள நாட்டில் ஞான, பக்தி, வைராக்கியங்களாலே சிறந்து விளங்கிய நம்மாழ்வாரைத் திருவழுதிவளநாடர் என்றே மக்கள் அழைக்கலாயினர். நம்மாழ்வார் குழந்தைப் பிராயத்திலிருந்தே இறையன்பு மிக்கவராய், தென்னரங்கன் செய்யதாளிணைகளில் சிந்தை தோய்ந்தவராய் வாழ்ந்தமையால் அப்பெருமாளின் திருவடிநிலையாக இவரை வைணவர்கள் போற்றிப் பூசித்தனர்.

வேதம் தமிழ் செய்த மாறனாகிய நம்மாழ்வாரின் பெருமைகளை நன்கு உணர்ந்த இராமாநுசர், தம்மை நம்மாழ்வாரின் திருவடியாக உலகம் கருதவேண்டும் என்று ஆசைப்பட்டார். இந்த விருப்பத்தை ஆழ்வார் திருநகரியை அடைந்த இராமாநுசர் நம்மாழ்வாரின் திருக்கோயிலுக்குச் சென்று, வேரற்ற மரம் போல் ஆழ்வாரின் பாதங்களில் விழுந்து வேண்டிக் கொண்டார். இராமாநுசரின் இந்த வேண்டுகோளுக்கு இணங்க, அன்றுவரை 'மதுரகவி' என்று அழைக்கப்பட்டு வந்த நம்மாழ்வாரின் திருவடிநிலைக்கு 'இராமாநுசன்' என்று புதுப்பெயர் சூட்டப்பெற்றது.

இராமாநுசருக்கு எம்பெருமானின் பலவாய திருப்பெயர்களைக் கேட்பதில் விருப்பம் மிகுதியாக இருந்தது. அதுபோலவே அப்பெருமானிடத்து ஆருக்காதல் கொண்டு தொண்டு செய்துவரும் ஆழ்வார்களின் திருப்பெயர்களைக் கேட்பதிலும் நனி விருப்பம் உண்டு. ஒருநாள் இராமாநுசர் தாமிரவருணியில் வழக்கம் போல் நீராடிக் கொண்டிருந்தார். நீராடியவுடன் கரையேறிக் காவியுடுத்தித் திருமண்காப்பு இட்டுக்

கொண்டிருந்தார். உடன் சீடர் பலரும் இருந்தனர். அப்போது அங்கு வந்த சலவைத் தொழிலாளியான வண்ணான் ஒருவன், இராமாநுசர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்.

வண்ணான் தான் வணங்கியதோடு நில்லாமல் சற்றுத் தொலைவில் அதே சங்கணித் துறையில் துணிகளைத் துவைத்துக் கொண்டிருக்கும் தன்னுடைய நான்கு பிள்ளைகளையும் பெயர் சொல்லிக் கூவி அழைத்து இராமாநுசரை வணங்கச் சொன்னான். அப்படித் தம் மக்களைக் கூப்பிடும்பொழுது மூத்தவனைச் 'சடகோபா! வா' என்றும், அதற்கடுத்தவனைக் 'காரி மாறா! வா' என்றும், மூன்றாமவனை 'வகுளாபரணா! வா' என்றும், கடைக்குட்டியைக் 'குருகூர்நம்பி!' என்றும் கூப்பிட்டான். பிள்ளைகளும் தந்தை சொற்படியே இராமாநுசரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். அப்போது இராமாநுசர் இந்த வண்ணானைப் போல் 'அமுது ஊறும் ஆழ்வார் திருப்பெயர்களைக் குழந்தைகளுக்கு இட்டு அன்போடு அழைக்கும் பேறு அடியேனுக்கு இல்லையே' என்று வருந்தினார்.

பின்பு ஒருநாள் ஆழ்வார் திருநகரியாகிய குருகூரிலிருந்து இராமாநுசர் தம் சீடர்களுடன் திருக்கோளூருக்குச் சென்றுகொண்டிருந்தார். திருக்கோளூர், மதுரகவி ஆழ்வார் அவதரித்த தலம். மதுரகவிகளோ 'தேவு மற்று அறியேன் குருகூர்நம்பி' என்று நம்மாழ்வாரைத் தவிர வேறு தெய்வம் உண்டு என்பதை அறியாதவர். அத்தகைய சிறந்த தொண்டரான மதுரகவிகள் பிறந்து வாழ்ந்த திருக்கோளூர் யாவரும் சென்று வணங்கத்தக்க ஏற்றமுடைய ஊராகும்.

இராமாநுசர் திருக்கோளூருக்குச் சென்று கொண்டிருக்கையில் அவ்வூரிலிருந்து எதிரே ஒரு பெண் வந்து கொண்டிருந்தாள். சீடர்களோடு வந்து கொண்டிருக்கும் இராமாநுசரை வணங்கி நின்றாள். அவள் திருக்கோளூரிலிருந்து வருவதை அறிந்து கொண்ட இராமாநுசர், அப்பெண்ணை நோக்கி, "ஆழ்வார் பாடலில் 'புகும் ஊர் திருக்கோளூரே' என்று வருகிறதே அது உனக்குப் புறப்படும் ஊராயிற்றே!" என்று கேட்டார்.

உடனே அப்பெண்மணி, "முயல்புழுக்கை வயலிலே கிடந்தாலென்ன? வரப்பிலே கிடந்தாலென்ன? சிறிதும் ஞானமில்லாத அடியேன் கோளூரில் இருந்தால் என்ன? வெளியே இருந்தால் என்ன?" என்று பதில் கூறினாள். மேலும் அப்பெண் நல்ல ஆசாரியனை அடிபணிந்து உபதேசங்களைப் பெறாத யான் எங்கிருந்தாலென்ன? என்ற கருத்தில் அருமையான கிராமியத் தமிழ் நடையில் பல வாக்கியங்களாகிற முத்துக்களை உதிர்த்தாள். அவைகள் எண்பத்தொரு வாக்கியங்களாக இன்றும் குருபரம்பரை நூல்களில் காணப்படுகின்றன. அவைகளில் சிலவற்றைக் காண்போம் :

'அகம் ஒழித்துவிட்டேனோ விதுரரைப் போலே
தாய்க் கோலம் செய்தேனோ அநுசூயைபோலே
பிஞ்சாய்ப் பழுத்தேனோ ஆண்டாளைப் போலே
அந்தரங்கம் சொன்னேனோ திரிசடையைப் போலே
தெய்வத்தைப் பெற்றேனோ தேவகியாள் போலே
ஆயனை வளர்த்தேனோ யசோதையாள் போலே
அவல் பொரியை ஈந்தேனோ குசேலரைப் போலே

ஆயுதங்கள் ஈந்தேனே அகஸ்தியரைப் போலே
இடைகழியில் கண்டேனே முதலாழ்வார் போலே
வழி அடிமை செய்தேனே இளையாழ்வார் போலே
அக்கரையில் விட்டேனே குகப்பெருமாள் போலே
கண்டுவந்தேன் என்றேனே திருவடியைப் போலே
யான் சிறியேன் என்றேனே திருமலை நம்பியைப் போலே
அந்தாதி பாடினேனே அமுதனாரைப் போலே'

என்று இப்படி எண்பத்தொரு வாக்கியங்களைத் தான் ஒன்றும் அறியாதவள் என்ற நிலையில் கூறினாள். உண்மையில் பார்க்கப்போனால் அந்தத் திருக்கோளூர்ப் பெண்மணி அறிந்திருந்த சாத்திர நுட்பமான கருத்துக்களையும், இதிகாச புராண, பிரபந்தக் கருத்துக்களையும் வேறு யாரும் அறியவில்லை என்றே சொல்லலாம். அகங்காரம் சிறிதும் இன்றி அன்போடு கண்ணனுக்கு அடக்கமாக அமுது படைத்த விதுரன் சரித்திரத்தையும், வேதமனைத்துக்கும் வித்தான திருப்பாவை அருளிய ஆண்டாளையும், சீதைக்கு அந்தரங்கத் தோழியாயிருந்து உதவிய திரிசடையையும், மற்றும் குசேலரையும், அகத்தியரையும், முதலாழ்வார்களையும், இளைய பெருமாளாகிய இலக்குவனையும், இராமனுக்கு அருந்தொண்டாற்றிய குகப்பெருமாளையும், சீதையைக் கண்டு வந்து இராமனுக்கு உயிரூட்டிய திருவடியாகிய அனுமனின் தொண்டையும் ஆகிய இவைகளையெல்லாம் அறிந்திருந்தும்–இதிகாச புராண வரலாறுகளைப் படித்திருந்தும் தன்னை ஒன்றும் அறியாதவள் என்ற நிலைமையில் 'முயல் புழுக்கை வயலில் இருந்தால் என்ன? வரப்பில் இருந்தால் என்ன?, என்று பணிவோடு தன்னைத் தாழ்த்திக் கொண்டு கூறிய அவளுடைய பொருள் பொதிந்த வாக்கியங்கள் இராமானுசரை வியப்பில் ஆழ்த்தின.

இராமானுசரும் அப்பெண்ணுக்கு இவ்வளவு அறிவு இருந்தும், நல்ல ஆசாரியன் இல்லாத குறையுள்ளது என்பதை உணர்ந்து, தன் குழுவில் அவளையும் சேர்த்துத் தூய வைணவியாக்கினார். பின்பு திருக்கோளூர் சென்று பெருமாளையும் தாயாரையும் வணங்கியதோடு மதுரகவி ஆழ்வார் சந்நிதிக்குச் சென்று, சத்ருக்கனன் எப்படித் தன்னுடைய புலன்களையெல்லாம் வென்று பரதன் ஒருவனுக்கே அடிமைத் தொண்டு செய்து வாழ்நதானே அதே நிலையில் நம்மாழ்வார் ஒருவரைத் தவிர மற்றவர்களைத் தெய்வமாகவோ, ஆசாரியராகவோ ஏற்றுக் கொள்ளாத இவ்வாழ்வாரின் உறுதியான பக்தியைப் பாராட்டிப் போற்றினார்.

இராமானுசர் திருக்கோளூரிலிருந்து ஆழ்வார் திருநகரிக்கு வந்து, சில நாட்கள் தங்கியிருந்தார். பின்பு எம்பெருமானிடமும், நம்மாழ்வாரிடமும் விடைபெற்றுக்கோண்டு திருக்குறுங்குடிக்குச் சென்றார். இராமானுசர் எங்குச் சென்றாலும் பல சீர்திருத்தங்களைச் செய்வது வழக்கம். அதுபோலவே திருக்குறுங்குடியிலும் பல சீர்திருத்தங்களைச் செய்தார். திருக்குறுங்குடி நம்பியே (இறைவனே) இவருக்குச் சீடராகிச் சீர்திருத்தங்களை எவ்வாறு செய்யவேண்டும் என்பதை இவரிடம் கற்றுக் கொண்டதாகக் குருபரம்பரை நூல்கள் கூறுகின்றன.

பிறகு மலையாள திவ்விய தேசங்களாகிய திருவண்பரிசாரம், திருவாட்டாறு முதலிய இடங்களுக்குச் சென்று நம்மாழ்வாரால் பாடப் பெற்ற அந்த எம்பெருமான்களை வணங்கி முடிவில் திருவனந்தபுரத்தை அடைந்தார்.

(தொடரும்)

சமயபோதனை

பாடம் 6 வினுக்கள் செப்டெம்பர் 1974.

வினுக்கள் இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றியனவே ஆகும். விடைகளை முழு அளவு (Foolscape size) இரண்டு தனித் தாள்களில் நான்கு பக்கத்திற்குள் எழுதி இச்செயலகத்திற்கு 30-9-1974க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். சந்தா எண், பெயர், வயது, முகவரி இவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

[மதிப்பெண் 100

மதிப்பெண் சமம்]

1. இறைவனின் எண்குணங்கள் எவை?
2. "நாதாந்த நாடகம்" விளக்குக.
3. மணிவாசகத் தமிழின் மாண்பை உணர்த்துக.
4. கச்சியப்ப முனிவர் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
5. ஐம்பூதங்களின் குணங்கள் என்னென்ன?
6. "நான் 'அறிவிக்க அன்றி அறியாவுளங்கள்" விளக்குக.
7. திருமுறைகள் எங்கே, எதன்மேல், எப்படி வைக்கப்பெற்றன?
8. நம்மாழ்வாரின் திருவடி நிலைக்கு என்ன பெயர்? எதனுல் சூட்டப் பெற்றது?
9. திருக்கோளூர் பெண்மணி உதிர்த்த முத்துக்கள் எவை?
10. விநாயகப்பெருமான் காசிபருக்குக் காட்டிய தோற்றப் பொலிவைக் கூறுக.

விடைகளை எழுதி உரிய அஞ்சல்தலை யொட்டிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும் :—

"அருளோசை"

தமிழ்நாடு தெய்விகப் பேரவை,

9, மகாராஜா சூரியராவ் சாலை,

ஆள்வார்பேட்டை,

சென்னை-600018.



29-8-74 அன்று நடைபெற்ற வட திருமுல்லைவாயில் அருள்மிகு
மாசிலாமணீசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு விழாவில்,
தவத்திரு குன்றக்குடி அடிகளார், அறநிலைய
ஆணையர் உயர்திரு கே. எஸ். நரசிம்மன்,
அறங்காவலர்கள்.

உ

திருச்சிற்றம்பலம்

திருவருட்பா

திருநெடு மால்அன் றுல்இடை நினது
சேவடித் துணைமலர்த் துகளான்
பெருநெடு மேனி தனிற்படப் பாம்பின்
பேர்உரு அகன்றமை மறவேன்!
கருநெடுங் கடலைக் கடத்துநற் றுணையே!
கண்கள் மூன்றுடைய செங் கரும்பே!
வருநெடு மருப்பொன் றிலகு வாரணமே
வல்லபைக் கணேச மா மணியே!

—திருவருட்பிரகாச வள்ளலார்

திருச்சிற்றம்பலம்

Edited, Printed at Peravai Achakam and Published by A. Narayanaswamy, B. A., for the Tamil Nadu Deivika Peravai at No. 9, Maharaja Surya Rao Road, Alwarpet, Madras-600018.